04.08.2025 OS.No. **66/2020**

**பி.வா.சா. 1 பெயர்: பன்னீர் செல்வம் த/பெ. குப்பன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கோவில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை. பட்டா எண் 100 ஆகும். மேற்படி பட்டா எண் 100ல் சர்வே எண் 4/3டி என குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். மேற்படி சர்வே எண்ணில் தான் கோவில் உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண் 4/3டி இல் உள்ள வண்டி பாதையின் அகலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. கோவில் அருகே 40 அடி அகலத்தில் பாதை உள்ளது. கோவில் கிழக்கு பக்கம் நீளம் 22 அடி மேற்குபக்கம் நீளம் 22 அடி வடக்கு பக்கம் நீளம் 22 அடி தெற்குபக்கம் நீளம் அதே 22 அடிதான். மேற்படி அளவுகளை எனது பதில் உரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்ணில் மேற்படி நீள அகல அளவுகளில்தான் கோவில் கட்டியதாக கூறிகிறேன் என்றாலும் அவை அதில் தான் நாங்கள் வழிபாடு செய்கிறோம் என்றாலும் சரியல்ல. வாதி சர்வே எண் 4/3டி இல் உள்ள கோவிலுக்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 4/3/E2 இல் உள்ள வாதிகளுக்கு சொந்தமான கோவிலுக்கும் எங்களுக்கும், சம்பந்தம் இல்லை என்று சொன்னால் அங்கு கோவிலே இல்லை. எந்த சர்வே எண்ணில் கோவில் உள்ளது என்பதை அளந்து அறிக்கல் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற ஆணையரை நியமணம் செய்ய மனுதாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சர்வே எண் 4/3டி இல் சர்வே எண் கோவில் உள்ளதாக நிரூபித்தால் வாதிகள் எந்த உரிமையையும் கோர மாட்டார்கள் என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண் 4/3E2 இல் வாதிகள் கட்டி வழிபடும் கோவிலில் வாதிகளை தவிர வேறுயாருக்கும் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ1 முதல் 4 வரையான நோட்டுகளுக்கும், வழக்கு சர்வே எண்ணில் உள்ள கோவிலுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நோட்டுகளின் சீட்டு விட்டதற்கான மட்டுமே கணக்கு எழுதி உள்ளோம் என்றாலும், கோவில் கட்டியதற்கான விவரம் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. சீட்டு போட்டுதான் கோவில் கட்டினோம். அவ்வாறு சீட்டு போட்டு கோவில் கட்டியதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.6 ஆவணத்திற்க்கும் வழக்கு

சொத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.6 ஆவணங்கள் திம்மான் மகன் மாதப்பன் என்பவருக்குசொந்தமானது என்றாலும் இவ்வழக்கிற்கு உரியது என்றாலும் மேற்படி மாதப்பன்தான் கோவில் தர்மகத்தான் என்பதால் அவரது பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி விவரத்தை பதிலுரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லிள்ளேனா என்றால் இல்லை. மேற்படி மாதப்பன் த/பெ திம்மன் என்பவர் வீடு எங்கள் ஊரில் உள்ளது என்றாலும் அதில் அவர் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றாலும் சரிதான். சர்வே எண் 4/3டி இல் மாதப்பன் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கோவிலுக்கு மின் இணைப்பு பெறும்போது சர்வே எண் 4/3டி ற்கான ஆவணங்கள் கொடுத்துதான் மின் இணைப்பு பெறப்பட்டதா என்றால் சரிதான். அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் வீட்டில் உள்ளது. ஜெயராமன் ரவியிடம் இருந்து கோவிந்தன் என்பவர் 2 செண்ட் நிலம் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அதேபோல் கோவிந்தனிடம் இருந்து ஜெயராமன் 2 செண்ட் நிலம் வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் எதிர் வழக்குரையில் 10 வது பத்தியில் ரவியின் நிலத்திற்கு செல்ல கோவிந்தன் நிலத்தை ரவியும் ரவியின் நிலத்தை கோவிந்தனும் இருவரும் சேர்ந்து மாற்றிக்கொண்டனர் என கூறியுள்ளோம் என்றால் சரிதான். ரவி ஜெயராமன் ஆகியோர் மீது ஆக்கிரமிப்பை அகற்றி கோரி யார் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஊர் பொதுமக்கள் சார்பாக ஊர் கவுண்டர் ராஜலிங்கம் மகன் குமார் என்பவர் வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி கோரிய இடத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுருந்தது என்றால் 3 தென்னை மரம் மற்றும் கரும்பு பயிர் அப்போது இருந்தது. ஜெயராமன் அவ்வாறு எவ்வளவு நாட்களாக தென்னை மரம் செய்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சுமார் 20, 25 வருடம் இருக்கும். நாங்கள் ஏரிக்கு எவ்வாறுஎந்த வழியாக நாங்களும் குமாரும் சென்றோம் என்றால் ஆர் . குமார், ராஜேஸ்வரி, அன்பழகன் ஆகியோர் நிலத்தில் சென்றோம். வாதிகள் அவர்களது நிலத்தில் கோவில் கட்டி அனுபவம் செய்து வருவதை குமாரின் தூண்டுதலின் பேரில்தான் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. சர்வே எண் 4/3டி இல் மாரியம்மன் கோவில் கட்டுவதற்காக கடக்கால் போட்டபோது வாதிகள் இடைஞ்சல் செய்ததாக கூறி மொரப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 08.02.2020 ல் வாதிகளுக்குசொந்தமான தாவா சொத்துகளில் அவர் விவசாய வேலை செய்து கொண்டிருந்தபோது நாங்கள் இடையூறு செய்ததால்தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துவில் உள்ள கோவிலுக்கும் எங்களுக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் அவர்கள் கோவில் கட்டி அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்யவோ

உரிமைகோரவோ எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு தீர்ப்பு ஆக வேண்டும் என்றாலும் வாதிகளின் அலைக்கழிச்சதற்காக வாதிகளுக்கு செலவு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.